## பிரபல ஓவியர் மாருதி காலமானார் - முதல்வர் இரங்கல்



**சென்னை**: தமிழகத்தின் பிரபல ஓவியர்களுள் ஒருவரான மாருதி நேற்று காலமானார். அவரது மறைவுக்கு முதல்வர் ஸ்டாலின் மற்றும் கலை உலகினர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

புதுக்கோட்டையில் 1938-ம்ஆண்டு ஆக.28-ம் தேதி டி.வெங்கோப ராவ், பத்மாவதி பாய் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தவர் ரங்கநாதன். புதுக்கோட்டையில் 10-ம் வகுப்பு வரை படித்தார். அவரது தந்தை ஆசிரியராக இருந்ததால், வீட்டில் கிடைக்கும் சாக்பீஸை கொண்டு ரங்கநாதன் ஓவியம் வரையக் கற்றுக்கொண்டார்.

பின்னர் சென்னை வந்த இவர்,1969-ம் ஆண்டில் திரைப்படங்களுக்கு பேனர் வரையும் நிறுவனத்தில் ஓவியம், பெயர் எழுதும் பணியில் சேர்ந்தார். பிரபல எழுத்தாளர்களின் தொடர் கதைகளுக்கும் ஓவியம் தீட்டியுள்ளார்.

தஞ்சாவூரைச் சேர்ந்த அரசு ஊழியரான விமலா என்பவரை திருமணம் செய்து கொண்டார். இத்தம்பதிகளுக்கு சுபாஷினி, சுஹாசினி ஆகிய இரு மகள்கள் உள்ளனர். இவர் திரைப்படங்களுக்கு பேனர்வரையும் வேலையையும் நாளிதழ்களில் அட்டைப்படங்கள் வரையும்வேலையையும் ஒரே நேரத்தில் செய்தார். இதனால் ‘மாருதி’ என்னும் புனைப் பெயரில் வரையத் தொடங்கினார்.

மேலும் உளியின்ஓசை, பெண் சிங்கம் உள்ளிட்ட படங்களின் ஆடை வடிவமைப்பாளராகவும் மாருதி பணியாற்றியுள்ளார்.

தமிழக அரசின் கலைமாமணி விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளை பெற்றுள்ளார். மார்க்சியம், பெரியாரியம் என முற்போக்கு சிந்தனை கொண்டவர். 86 வயதானஇவர் புனேவில் தனது மகள் வீட்டில்தங்கியிருந்தார். உடல் நலக்குறைவு காரணமாக நேற்று மாலைகாலமானார். அவரது இறுதிச் சடங்கு புனேவில் இன்று காலை நடைபெறுகிறது. மாருதியின் மறைவுக்கு கலை உலகினர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

**முதல்வர் இரங்கல்:** ஓவியர் மாருதி மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், ‘‘தமிழ்வார இதழ்களில் தமது தூரிகையால் கோலோச்சி - தமிழகஅரசின் கலைமாமணி விருது பெற்றஓவியர் மாருதியின் மறைவுச் செய்தி கேட்டு மிகவும் வருந்தினேன். தனித்துவம் மிக்க தனது ஓவியங்களால் தமிழ் நெஞ்சங்களில்நீங்கா இடம்பெற்றிருப்பவர். முன்னாள் முதல்வர் கருணாநிதியின் திரைப்படங்களில் பணியாற்றியவர். அவரது மறைவால் வாடும் குடும்பத்தினர், உறவினர்கள், பத்திரிகை உலக நண்பர்கள் மற்றும்வாசகர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கல்’’ என தெரிவித்துள்ளார்.

## சிஆர்பிஎப் நிறுவன தினம் பிரதமர் மோடி வாழ்த்து




**புதுடெல்லி**: சிஆர்பிஎப் நிறுவன தினத்தையொட்டி அந்த படை வீரர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கடந்த 1939-ம் ஆண்டு ஜூலை 27-ம் தேதி சிஆர்பிஎப் படை உருவாக்கப்பட்டது. இந்த படை தற்போது மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது. சுமார் 3.13 லட்சம் வீரர்கள் படையில் பணியாற்றி வருகின்றனர். கலவர தடுப்பு, தீவிரவாத தடுப்பு, முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு பணியில் சிஆர்பிஎப் வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்த சூழலில் சிஆர்பிஎப் நிறுவன தினத்தையொட்டி பிரதமர் நரேந்திர மோடி ட்விட்டரில் நேற்று வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: வீர, தீரமிக்க அனைத்து சிஆர்பிஎப் வீரர்களுக்கும் படையின் நிறுவன தினத்தில் வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன். உங்களது துணிச்சல், அர்ப்பணிப்பு மற்றும் தன்னலமற்ற சேவையை நமது தேசம் பாராட்டுகிறது. நாட்டின் பாதுகாப்புக்காக நீங்கள் ஆற்றும் சேவை போற்றத்தக்கது. இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

**இந்தியாவில் 2019 முதல் 2021 வரை 10 லட்சம்+ பெண்கள் மாயம்: ஓர் அதிர்ச்சி ரிப்போர்ட்**



**புதுடெல்லி:** இந்தியாவில் கடந்த 2019 முதல் 2021 ஆம் ஆண்டு வரை மட்டும் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட பெண்கள், 18 வயதுக்கு கீழ் உள்ள 2 லட்சத்துக்கும் மேற்பட்ட பெண் பிள்ளைகள் காணாமல் போனதாக தேசிய குற்ற ஆவணக் காப்பகம் தெரிவித்துள்ளது.

தேசியக் குற்ற ஆவணக் காப்பகம் (National Crime Records Bureau, சுருக்கமாக: NCRB), இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டம், இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் சிறப்பு மற்றும் உள்ளூர் சட்டங்கள் ஆகியவற்றால் வரையறுக்கப்பட்ட குற்றப் புள்ளிவிவரங்களை சேகரித்து வெளியிடுகிறது. அதன்படி தேசிய குற்ற ஆவணக் காப்பகம் அண்மையில் ஒரு புதிய அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் கடந்த 2019-ஆம் ஆண்டு முதல் 2021-ஆம் ஆண்டு வரை இந்தியாவில் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட பெண்கள், 2 லட்சத்துக்கும் மேற்பட்ட பெண் பிள்ளைகள் காணாமல் போனதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் 2021-ல் மட்டும் 18 வயதுக்கும் மேற்பட் பெண்களில் 3,75,058 பேர் காணாமல் போயியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அதிரவைக்கும் ம.பி., மகாராஷ்டிரா:** பெண்கள் காணாமால் போகும் குற்றம் நடைபெறும் மாநிலங்களில் மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம் முதல் இரண்டு இடங்களில் உள்ளன. இந்த இரு மாநிலங்களில் தான் 2019 முதல் 2021 வரை அதிகளவிலான பெண்கள் காணாமல் போயுள்ளனர். மத்தியப் பிரதேசத்தில் 2019-ஆம் ஆண்டு 52,119 பெண்கள், 2020 ஆம் ஆண்டு 52,357 பெண்கள், 2021-ஆம் ஆண்டு 55,704 பெண்கள் காணாமல் போயுள்ளனர்.

மகாராஷ்டிராவில் 2019-ல் 63,167 பெண்கள், 2020-ல் 58,735 பெண்கள், 2021-ல் 56,498 பெண்கள் மாயமாகியுள்ளனர்.

மத்தியப் பிரதேசத்தில் 2019-ஐ விட 2021-ல் பெண்கள் காணாமல் போன எண்ணிக்கை குறைந்திருந்தாலும் ஒட்டுமொத்தமாக 2019 முதல் 2021 வரையிலான 3 ஆண்டுகளில் காணாமல் போன பெண்கள் எண்ணிக்கை அடிப்படையில் மத்தியப் பிரதேசம் இரண்டாவது இடத்தில் உள்ளது.

**18 வயதுக்குக்கீழ் உள்ளோர் -** 18 வயதுக்கு கீழ் உள்ள பெண் பிள்ளைகள் காணாமல் போனதன் புள்ளிவிவரங்களின்படி பார்த்தால் மேற்கு வங்கத்தில் அதிகபட்சமாக 13,278 பேர் கடந்த 2021-ஆம் ஆண்டில் மட்டும் காணாமல் போயுள்ளனர். இதே ஆண்டு நாடு முழுவதும் மொத்தம் 90,113 பெண் பிள்ளைகள் (18 வயதுக்கும் கீழ் உள்ளோர்) காணாமல் போயுள்ளனர். நாடு முழுவதும் 2019 முதல் 2021 வரை மொத்தமாக 10,61,648 பெண்கள் காணாமல் போயுள்ளனர். இதே காலகட்டத்தில் 2,51,430 பெண் பிள்ளைகள் காணாமல் போயினர்.

**மாநில அரசுகளின் பொறுப்பு:** இது தொடர்பாக மத்திய உள் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில், சட்டம் - ஒழுங்கைப் பேணி பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நடக்காமல் தடுக்க வேண்டியது, குற்றங்களை விசாரித்து குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்க வேண்டியது ஆகியன மாநில அரசுகளின் பொறுப்பு என்று குறிப்பிட்டுள்ளது. பெரும்பாலும் பெண்கள், பெண் பிள்ளைகள் காணாமல் போவதென்பது ஆட்கடத்தல் கும்பல்களாலேயே நடைபெறுகிறது. அவர்கள் அப்பெண்களை பாலியல் தொழில் கும்பலிடம் விற்றுவிடுவதே பெரும்பாலும் நடைபெறுகிறது.

## அடுத்த 10 ஆண்டுகளில் செமிகண்டக்டர் தயாரிப்பில் முக்கிய நாடாக இந்தியா மாறும்: மத்திய அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் தகவல்



**புதுடெல்லி:** இந்தியா அடுத்த 10 ஆண்டுகளில் செமிகண்டக்டர் தயாரிப்பில் முக்கிய நாடாக உருவாகும் என்று மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

தற்போது உலக நாடுகள் மின்னணு வாகனங்கள் நோக்கி நகர்ந்து வருகிற நிலையில், செமிகண்டக்டர்களுக்கான தேவை அதிகரித்துள்ளது. இந்தியா அதன் பயன்பாட்டுக்கான செமிகண்டக்டர்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துவந்த நிலையில், தற்போது உள்நாட்டிலேயே செமிகண்டக்டர் தயாரிப்பு கட்டமைப்பை உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.

செமிகண்டக்டர் துறையில் அந்நிய முதலீட்டை ஈர்க்கும் நோக்கில், வெளிநாட்டு நிறுவனங்களிடம் மத்திய அரசு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறது. இதன் விளைவாக, கடந்த மாதம் அமெரிக்காவைச் சேர்ந்த மைக்ரான் நிறுவனம் இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் செமிகண்டக்டர் ஆலை அமைக்க ரூ.6,700 கோடி முதலீடு செய்வதாக அறிவித்தது.

இந்நிலையில், இந்தியா செமிகண்டக்டர் தயாரிப்பில் அடுத்த 10 ஆண்டுகளில் முக்கிய நாடாகமாறும் என்று ராஜீவ் சந்திரசேகர் தெரிவித்துள்ளார். இது குறித்து mமேலும் அவர் கூறுகையில், “உலகநாடுகள் செமிகண்டக்டர் தயாரிப்புக்கு ஏற்ற நாடாக இந்தியாவை பார்க்க ஆரம்பித்துள்ளன.

செமிகண்டக்டர் துறையை ஊக்குவிக்க மத்திய அரசு, உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டத்தின் கீழ் 10 பில்லியன் டாலர் (ரூ.82,000 கோடி) நிதி ஒதுக்க ஒப்புதல் வழங்கியுள்ளது. இது அடுத்த பத்து ஆண்டுகளில் செமிகண்டக்டர் துறையில் இந்தியாவை முக்கிய நாடாக மாற்றும். இதன்

மூலம், சீனா செமிகண்டக்டர் துறையில் 25 ஆண்டுகளில் சாதிக்காததை இந்தியா 10 ஆண்டுகளில் சாதிக்கும்" என்று தெரிவித்தார்.

EVA STALIN IAS ACADEMY